விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 26 ஜுலிகஷ் 4 இதழ் 182

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 11-8-1986

## தனிநாட்டை ஆதரிக்க முடியாவிடினும்
# தமிழர் சம உரிமையுடன் வாழ இந்தியா உதவும்!
### போராளிகளிடம் ஜி. பி.- வெங்கடேஸ் உறுதி

சென்னை ஞாயிறு

''தனிநாட்டுக் கோரிக்கைக்கு இந்தியா ஆதரவளிக்க இயலா விட்டாலும் தமிழ் மக்கள் இலங்கையில் சகல உரிமைகளையும் பெற்று சுதந்திரமாக வாழ இந்தியா உதவும்', என்று இந்திய வெளியுறவுச் செயலா திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரனும் கொள்கைவகுக்கும் கட்சித்தலைவர் திரு பார்த்தசாரதியும் உறுதியளித்துள்ளனர்

அண்மையில் புதுடில்லி சென்று திரும்பிய தமிழ்ப் போராளிகளை மேற்கோள் காட்டி 'புரொண்ட் லைன்' சஞ்சிகை மேற்படி தெரிவித்துள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ்., ஈரோஸ், ரெலோ., புளொட், எல். ரி. ரி ஈ. ஆகிய ஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் அண்மையில் சேர்ந்த பிரதிநிதிகள் அண்மையில் புதுடில்லி சென்று வெளியுற

[4-ம் பக்கம் பார்க்க]

யாழ். பெரியகடை

# வாழைப்பழசந்தைக்குள் ஷெல்
# 3 பேர் பலி; 11 பேர் காயம்

(ஐ. சண்முகலிங்கம்)

நேற்றுப் பகல் கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் மூன்றுபேர் பலியானுர்கள். பதினெரு பேர் காயமடைந்தனர். சனசந்தடியுடன் காணப்பட்ட யாழ். பெரியகடை வாழைப்பழச் சந்தைக்குள்ளேயே இந்த ஷெல் அனர்த்தம் நிகழ்ந்தது. இதுதவிர நேற்று யாழ் நகரின் பல்வேறு பகுதிகளும் 'ஷெல்' பிரயோகத்துக்குள்ளாயின.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் [புளொட்] தினருக்கும் இராணுவத்தினருக்குமிடையே ஆரம்பமான மோதலையடுத்தே இந்த ஷெல்தாக்குதல் நேற்றுக்காலை இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

சனசந்தடியுடன் காணப்பட்ட யாழ்ப்பாணம் பெரியகடை வாழைப்பழச் சந்தைக்குள் கோட்டையிலிருந்துஏவப்பட்ட 'ஷெல்' ஒன்று விழுந்து வெடித்தது. இதில் இரு வாழைப்பழ வியாபாரிகள் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டனர். மற்றொரு நர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமானுர்.

வாழைப்பழ வியாபாரியான செல்லையா ராமமூர்த்தி (வயது 33) ஸ்தலத்திலேயே பலியானுர் இவர்மூன்றுபிள்ளைகளின் தந்தையாவார் ஏழாலையைச் சேர்ந்த இவர்தலைபிளந்த நிலையில்இறந்துகிடக்கக்காணப்பட்டார்.

சக்திவேல் பாலசந்திரன் (வயது 28) என்பவர்இவருடன் பலியான மற்றையநபராவார். கன்ணுதிட்டியைச் சேர்ந்த இவர் ஒரு மெக்கானிக் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏழாலையைச் சேர்ந்த கதிரவேலு ஞானலிங்கம் [வயது21] என்பவர் யாழ் ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சைக்குப் பின் நேற்றுப் பிற்பகல் மரணமானுர்.

இவர்கள் தவிர படுகாயமடைந்த நிலையில பலர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாவற்குழியைச் சேர்ந்த மத்தியூஸ் (வயது 23) என்ற தொழிலாளியும், காங்கேசன் துறை தையிட்டியைச் சேர்ந்த லிங்கமூர்த்தி (வயது 30) என்பவரும் அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர்

இவர்களில் மத்தியூஸ் என்பவரின் நிலை தொடர்ந்து கவ

(4-ம் பக்கம் பார்க்க)

### 16 பேர் கைது

[மட்டக்களப்பு நிருபர்]

செங்கலடியில் திடீர் தேடுதல் வேட்டையிலீடுபட்டிருந்த அதிரடிப்படையினர் 16 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்-

[4ம் பக்கம் பார்க்க]

கோட்டைக்கு அருகே

## 15 அடி உயர பாதுகாப்பு அரண்

யாழ்ப்பாணம், திங்கள்.

நேற்று முன்னிரவு காங்கேசன்துறை வீதியில் யாழ். கோட்டைக்கு சுமார் 200யார் தொலைவில் பாதுகாப்பு அரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

சுமார் 15 அடி உயரமான இந்த அரண் மண் மூடைகளாலும், தகரங்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மீது 'புளொட், என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

இவ்வரண் அமைக்கும் போதே கோட்டை இராணுவமுகாமிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் ஆரம்பமானதாகவும் தொடர்ந்து அவ்விடத்தில் நின்ற 'புளொட்' போராளிகளுக்கும் கோட்டை இராணுவத்தினருக் மிடையே மோதல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[4-ம் பக்கம் பார்க்க]

கல்முனையில் கலவரம்

## இருவர் பலி; 25 கட்டிடங்கள் தீவைத்து எரிப்பு

[மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்]

கல்முனையில் முஸ்லிம் கோஷ்டியினர்தமிழர்களுக்கு சொந்தமான வீடுகள், கடைகள் உட்பட சுமார் 25 கட்டிடங்களுக்குத் தீமூட்டி எரித்ததுடன், இரு தமிழர்களைக் கத்தியால் குத்திக் கொலை செய்தனர். பல தமிழர்களைத் தாக்கியும் உள்ளனர்.

இப்பயங்கர சம்பவம் நேற்று நடைபெற்றது.

கல்முனையில் நேற்று திடீரென ஆத்திரமடைந்த முஸ்லிம்களில் சிலர், அங்குள்ள தமிழர்களின் வீடுகள், கடைகள் உட்பட சுமார் 25 கட்டிடங்களுக்குத் தீமூட்டி எரித்ததால் அவை முற்றாக எரிந்து சாம்பரானது.

இக்கலவரத்தில் இருதமிழர்கள் கத்திக் குத்துக்கிலக்காகி உயிர்துறந்தனர்.

இனம்தெரியாத வாலிபர்களால் கடத்தப்பட்ட முஸ்லிம் இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை காயங்களுடன் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டதையடுத்தே முஸ்லிம் கோஷ்டியினர் இந்த அட்டகாசங்களில் ஈடுபட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டுக் கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞர் ஒரு கடத்தல் பேர்வழி என்றும். கள்ளச் சாமான்களை வாங்கி கொள்ளை லாபம் அடிப்பவர்

[4-ம் பக்கம் பார்க்க]

### எச்சரிக்கைச் சுவரொட்டிகள்

வவுனியா, திங்

''இராணுவ முகாங்களுக்கு எக்காரணம் கொண்டுயாரும் சென்றால் அவர்கள் மீதுகடும் நடவடிக்கை எடுக்கப்படும். இது இறுதி எச்சரிக்கை'' 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இவ்வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் நேற்று வவுனியா மாவட்டத்தில் காணப்பட்டன. [மா]

## முன்னுள் இந்திய இராணுவ தளபதி வைத்யா கொலை!

புதுடில்லி, ஆகஸ்-திங்கள்

இந்திய ராணுவத்தின் முன்னுள் தளபதி ஜெனரல் அருண் வைத்யா நேற்று இனந்தெரியாத நான்குகொலைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பூனு நகருக்கண்மையில் காரில் தமது மனைவியுடன் ஜெனரல் வைத்யா சென்றுகொண்டிருக்கையில் ஸ்கூட்டர் ஒன்றில்வந்த கொலைஞர்கள் இவரையும் மனைவியையும் சுட்டனர்.

காயமடைந்த இருவரும் உடனடியாக ராணுவ மருத்துவமனை யொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஜெனரல் வைத்யா மரணமானுர். திருமதி. வைத்யா சத்திரசிகிச்சையின் பின்னர் ஆபத்தான நிலையைத்தாண்டி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

83ம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி இந்திய ராணுவத்தின் 10வது தளபதியாக பதவியேற்றஜெனரல்வைத்யா இவ்வாண்டு ஜனவரி 31ம்திகதி வரை அப்பதவியிலிருந்தார்.

மறைந்த முன்னுள்இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அபிமானத்துக்

[4-ம் பக்கம் பார்க்க]

## கண்ணிவெடித் தாக்குதல்: 5 இராணுவத்தினர் பலி!

யாழ்ப்பாணம் திங்,

திருமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் நடத்தியகண்ணிவெடித்தாக்குதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயங்களுக்குள்ளானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்லம்பத்தை என்னுமிடத்தில் நேற்று முன்தினம காலை 10 மணியளவில் இக்கண்ணிவெடித்தாக்குதல் இடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் மயிலவேவ இராணுவமுகாமிலிருந்து தேடுதல் வேட்டைக்காக 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நடைபவனியாக திரியாயை நோக்கிரோந்துசென்றுகொண்டிருக்கையில் கல்லம்பத்தையில் வைத்து எமது போராளிகள் தரைக்கண்ணி வெடியினை வெடிக்கச்செய்ததில் 5இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் பலத்த காயங்களுக்குள்ளானுர்கள். இத்தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின் வாங்கினர். இச்சம்பவத்தின்போது எமது தரப்பில் சேதமெதுவும் இல்லை.'' [மா]

அரசு-கூட்டணி பேச்சுக்கள்

## வெற்றியளிக்கும்!

### வெங்கடேஸ் நம்பிக்கை

புதுடில்லி, ஞாயிறு

இலங்கை அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையில் இம்மாதம் 16-ம் திகதியளவில் மீண்டும் ஆரம்பமாகவிருக்கும் பேச்சு வார்த்தைகள் வெற்றியளிக்கும் என்று இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காண இந்தியா நிச்சயம் தொடர்ந்து உதவும் எனவும் திரு. வெங்கடேஸ்வரன் உறுதியளித்தார்.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நாளை அல்லது மறுதினம் கொழும்பு வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. [ஊ]

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி வடக்கில் 6 பரப்புகாணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: த. பவளகேசரி, மதராஸ் யுவலறி மாட், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-3924]

அளவெட்டி வடக்கிலும் கும்பிழாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு மேற்கு வீதியிலும் உள்ள கட்டையன் சீமா என்னும் 10 நில பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- திருமதி. தர்மலிங்கம் கேணிக்கரை அளவெட்டி.
(C 3987)

கொழும்புத்துறையில் இந்து மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் நல்ல சூழ்நிலையில் 3 பரப்பு வெறுங்காணியும், கொட்டடி வில்லூண்டி பிள்ளையார் கோவிலடிக்கு அருகாமையில் மிகவும் குறைந்த விலையில் 4 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: Mack's 8, 1st Lane PiontPedro Road, Jaffna. Telephone: 24791, 24836.
(C-3999)

Remington தமிழ் (Standard) Adler ஆங்கிலம் (Standard) தட்டச்சு இயந்திரங்கள் உடன் விற்பனைக்கு ந தம்பிப்பிள்ளை 'Raji Vasam' அம்மன் கோவிலடி, சங்கானை. [விறகு ஆலைக் கருகாமையில்].
[C-3997]

வீட்டுத்தளபாடங்கள் தட்டச்சு யந்திரம். பாவித்த சைக்கிள், ஹோல்செற்றி, கண்ணாடி, பித்தளைப்பாத்திரங்கள், குளிர்சாதனப்பெட்டி மலிவான விலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 331, மெயின் வீதி யாழ்ப்பாணம். ('டேவிற் ரோட் சந்திக்கு அருகாமையில்)
[C 3954]

வெளிநாடு செல்பவர்களின் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள் வீட்டுத்தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள், கட்டில் மெத்தைகள், பியானோ எக்கோடியன், சிங்கர் தையல் மெஷீன், டெக்செற் T. V. டெக், Show Case கண்ணாடி மேசைகள், Meat Safe, Formica சாப்பாட்டு மேசைக் கதிரைகள். கிளாஸ் வகைகள், சில்வர் பொருட்கள் மின்விசிறிகள் மற்றும் பல உடன்விற்பனைக்கு 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தியருகில்)
(C-3895)

## வாடகைக்கு

வீடியோ, கசற், டெக் என்பன வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: K. சங்கர், நாச்சிமார் ஒழுங்கை, நவாலி, மானிப்பாய்.
[C 3968]

## வகுப்புகள்

பௌதிகம் A/L 87 பிரிவுக்கு மின்னியல் ஆரம்பம்: 16 08-86 சனி, ஞாயிறு 2-30—3-30 ஆசிரியர் திரு. மணியம் New Science Academy, Jaffna.
[C-3991]

A/L 87 கணித வகுப்புக்கள். வெக்டர் வேலாயுதம் அவர்களால் தூய பிரயோக கணித புதிய வகுப்புக்கள் ஆரம்பம். விபரங்கட்கு; நிர்வாகி, நியூ சயன்ஸ்அக்கடமி, B M C.க்கு முன்பாக, யாழ்ப்பாணம். பிந்திய விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.
[C-3990]

## தேவை

இரும்புப் பணப் பெட்டி. மிழ் தட்டச்சு இயந்திரம் (றெமிங்டன்விரும்பத்தக்கது). இரும்பு அலுமாரி விற்பனை செய்யவுள்ளோர் தொடர்பு கொள்க: பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு.
(C 3969)

தையற் கலையில் நன்கு அனுபவமுள்ள கட்டிங் செய்யக்கூடிய பெண்கள் தேவை உடன்தொடர்பு கொள்ளவும்: குயிக்ஸ்ஸார் காமென்ஸ் (Quick Star Garments), 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
[C 3978]

## சேவை

வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். அவர்களுடைய வீட்டுத் தளபாடங்கள் மற்றும் சகல உபகரணங்களும் மிகவும் நியாயமான விலைக்கு உடன்வாங்கி உங்களின் சுமையைக் குறைக்க பெயர்பெற்ற ஓரேஒரு ஸ்தாபனம் Mack Auctioners and Brokers 8. 1st Lane, Point Pedro Road Jaffna. Telephone; 24791, 24836
[C-3998]

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் வெற்றுச் சாக்குகளும், உறைகளும், திறமான மாட்டெருவும் விற்பனைக்குண்டு. முழுவிபரங்களுக்கும் தொடர்புகொள்ளவும்: பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திச்சங்கம், திருநெல்வேலிகிழக்கு. கோப்பாய்.
A-1123

## 10-வது நினைவஞ்சலி



திரு ஆர் செல்லையா
(சன்லைட் றைக்கிளீனேர்ஸ் உரிமையாளர்)
தோற்றம்: 30-5-1914
மறைவு: 27-8-1976

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து அன்புடனும், பாசமுடனும் வளர்த்து அயராது உழைத்து எங்களை வாழவைத்த அன்பின் தெய்வமே ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்புள்ள மனைவி,
பிள்ளைகள்.

(C 3983)

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. தம்பு சபாரட்ணம்
தோற்றம்; 25 09-1909
மறைவு: 23-07-1985
திதி: 11-08-1986

அன்பின் சிகரமாய் அறிவின் உறைவிடமாய் எம்மையெல்லாம் அரவணைத்து வழிசமைத்த தெய்வமே உங்கள் துயர் தாங்காது கவலையுறுகிறோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறோம் அன்பின் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பனிக்கர் வளவு,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

[C-3980]

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



ஆறுமுகம் சிவஞானசுந்தரம்
[ஆறுமுகம் அன சன்ஸ்-ஈழநாடு ஏஜென்சி-பரந்தன்]
அன்னையின் மடியில்: 11- 02- 1964
ஆண்டவன் அழிப்பு: 28- 06- 1986
திதி: 11- 08-1986

அன்பின் திருஉருவாய் எமகெல்லாம் ஒளிவிளக்காய், பண்பின் உறைவிடமாய் எம்மையெல்லாம் வழிநடத்திய குலக்கொழுந்தே எங்கு சென்றாய். கொடியவர்கள் தான் இரக்கமின்றி உன்னை அழித்துவிட்டார்களே!! உன் ஆத்மா சாந்தியடையட்டும்!! இவர் நினைவாக, 11- 08- 86 திங்கட்கிழமை காரைநகர் பாலாவோடையில் ஆத்ம சாந்திக் கிரியைகள் நடைபெறும் வேளையில், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அப்பா, அம்மா,
சகோதரிகள், தம்பி,
மச்சான், மருமக்கள்.
பாலாவோடை,
காரைநகர்.

(A 1105)

## பிரயாண ஒழுங்குகள்

★ ஈராக் (லேபறேஸ்)

உடனடியாக ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ சவுதி–ஆஸ்பத்திரி, விமானநிலைய கிளீனேஸ்

★ குவைத்– ஆஸ்பத்திரி கிளீனேஸ்

பிரயாணம் செய்யவிரும்புவோர் உடனடியாக எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்
பிரசாந்தி வைத்திய நிலையம்,
(கற்பகப் பிள்ளையார் கோவிலடி)
உடுவில் கிழக்கு - உடுவில்.

(இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும்.)

(C 3952)

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

நேரடி பிரயாணம் உடனுக்குடன் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

★ சவூதி ★ குவைற்
★ அபுதாபி

ஆகிய இடங்களில் வருமான வாய்ப்புகளுக்கான ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.

Passport, Bond
முதலியனவும் செய்து கொடுக்கப்படும்.

# GROUP ATLANTIC

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]

A 1035

## கட்டிட நிர்மாண . தொழிற் பயிற்சி

### யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை

பல உயர்ந்த தொழிற்கல்வி வசதிகளை அளித்து வரும் இந்த நிறுவனம் இப்பொழுது "NORAD" உதவியுடன் கட்டிட நிர்மாணத் துறையில் இரு புதிய பயிற்சி நெறிகளைப் பயிலும் வாய்ப்பை ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு அளிக்க முன்வந்துள்ளது.

(I) கட்டிட நிர்மாண பயிற்சி
(II) மரவேலைப் பயிற்சி
} Construction Workers

★ அடிப்படைத் தொழில்நுட்ப போதனையும் பயிற்சியும்
★ உள்நாட்டு/வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள உதவும் சான்றிதழ்.
★ சுயசார்பு உடையவராகும் தரத்திற்கு நேரடித் தொழிற் பயிற்சியும் உபகரணங்களும்.
★ பயிற்சிக்கால உதவிப்பணம்.

முதலான வசதிகள் அளிக்கப்படும்.

காலம்: 5 மாதம் - (20 வாரங்கள்)

மொழி: தமிழ் - [ஆங்கில பாடவிளக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது].

**ஆரம்பம்: புரட்டாதி 1-ம் நாள்**

தராதரம்: எட்டாம் வகுப்பு முதல், க. பொ. த. [சா] வரை படித்த, 24 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.

அலுவலகத்தில் விண்ணப்பப் படிவம் பெற்று ஆவணி 26ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்,
Jaffna College Technical Institute
Vaddukoddai.

A 1107

### மணிவாக்கு

கிழிந்த துணிகள் கடதாசியாகின்றன; கடதாசி பணமாகின்றது; பணம் வங்கியை உருவாக்கின்றது; வங்கி கடன் தருகின்றது. கடன் ஏழ்மையைத் தருகின்றது; ஏழ்மை கிழிந்த துணிகளைத் தருகின்றது.

—ஸ்கொட்ச் பழமொழி.

## நமது நோக்கு

# புதிய உத்திகள்?

அரசாங்கக் காரியாலயங்கள், வங்கிகள் போன்றவை மிக அமைதியாக நடைபெற்று வருவதால், வடக்கில் திவிரவாதிகள் ஆத்திரமடைந்துள்ளார்களாம் இதனால் இந்தக் காரியாலயங்களில் பணிபுரியச் செல்லும் ஊழியர்களைப் பயமுறுத்தி வேலைக்குச் செல்லாமலிருக்கச் செய்வதற்காக அவர்கள் சத்தக் குண்டுகளை வெடிக்கச் செய்யும் புதிய உத்தியைப் பயன்படுத்துகிறார்களாம்.

அரசாங்க அறிவித்தல் ஒன்று இவ்வாறு தெரிவிக்கின்றது.

தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாகம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குச் சீர்குலைந்து போயிருப்பதை இப்பகுதி மக்கள் அறிவார்கள்.

ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்கு மிடையில் மோதல் ஏற்படும் வேளைகளில், அம்மோதலையடுத்து மீண்டும் நிலைமைகள் சீராகும் வரை அப்பகுதியிலுள்ள காரியாலயங்களுக்கு ஊழியர்கள் போகாமல்விடுவது மட்டுமல்ல; பல நாட்களுக்கு அப்பகுதிகளில் சாதாரண வாழ்க்கையே முடங்கிப்போவதும்கூட இப்பிரதேசத்திற்குரிய வழக்கமாகிவிட்டது. மேலும், ராணுவ முகாம்கள், ராணுவ நடமாட்டங்கள் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள காரியாலயங்களுக்கு ஊழியர்கள் செல்லவே அஞ்சுகிறார்கள். அப்பகுதிகளின நிரந்தர குடிமக்களும் வேறிடங்களுக்குக் குடியேறிவருகிறார்கள்.

யாழ்ப்பாண நகரில் கோட்டை முகாம் பகுதியில் திடீரென ஆரம்பமாகும் மோதல்களின் போது நகர் ஸ்தம்பித்துவிடுகின்றது. 'ஷெல்' எந்த இடத்தில் விழும் என்று சொல்லமுடியாததால் கடைகள், சநதைகள் எல்லாம் உடனடியாக மூடப்பட்டுவிடுகின்றன

இப்படியான சமயங்களில் அரச ஊழியர்களோ, வங்கி ஊழியர்களோ பணிக்குச் செல்லமுடியாது, வேலை போனாலும் உயிர்போவதை அவர்கள் விரும்பமாட்டார்கள் அல்லவா?

எனவே இம்மாதிரி அசாதாரணச் சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய நாட்களில் பொதும[illegible] தேவையான [illegible]ள் நடத்தப்பட்டுவருவதைப் பெரும்பாலும் எவரும் தடுப்பதில்லை. அரச, கூட்டுத்தாபன, வங்கி, ஊழியர்கள் சர்வசாதாரணமாக பணிகளுக்குப் போய்வரமுடிகின்றது. மேலும் அரச ஊழியர்களை வேலைக்குச் செல்லாது தடுப்பதாயினும் கூட அது போராளிகளுக்கு சிரமமான காரியமாய் இல்லை. எனவே சத்தவெடிகளைக் கொண்டு அவர்களைப் பயமுறுத்தவேண்டிய அவசியம் இல்லை.

ஆக, இந்த ஊழியர்களுக்கும் பணியாளர்களுக்கும் பயமுறுத்தல் என்ற நிலை இருதரப்பினருக்குமிடையில் நேரடி அல்லது மறைமுகமான மோதல்கள் ஏற்படும்போதே உருவாகின்றது. மோதல்களையடுத்து சாதாரண மக்கள் பெரும்பாலும் இப்சைக்குள்ளாவது வழக்கமென்பதனால் மாமூல் வாழ்க்கை முடங்கிப்போகின்றது. இதுவே இப்பொழுது இங்குள்ள உண்மையான நிலைமையாகும்.

இது இவ்வாறிருக்க, அண்மைக்காலங்களில் புது உக்திமுறையிலான பயமுறுத்தல் நடவடிக்கை ஒன்று கொழும்புப் பகுதியில் இடம்பெற்று வருவதைக்காண்கின்றோம். கடந்த மாதம் தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழுவினர் கொழும்புக்கு வந்த வேளையில் அவர்கள் தங்கவிருந்த ஹோட்டல் மீது குண்டு வீசப்பட்டது.

அரசாங்கம் இனப்பிரச்னைக்கென முன் வைத்துள்ள திட்டத்துக்கு ஆதரவாக சில கருத்துக்களை வெளியிட்டுவரும் சமசமாஜக்கட்சியின் தலைவர் டாக்டர். கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களுக்கு குண்டெறிய முயற்சி நடந்துள்ளது. இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக இந்தியாவுக்கு சென்று தமிழ்ப் போராளிகளின் தலைவர்களை சந்தித்துவிட்டு வந்துள்ள இலங்கை மக்கள் சுதந்திரக் கட்சிச் செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க வீட்டில் குண்டொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவங்கள் எதைக் காட்டுகின்றன?

தற்போதைய யோசனைகளைத்தவிர அதற்குமேல் ஒன்றுமே கேட்கக் கூடாது. கேட்ப்பவர்களுக்கு சாதகமாக இருக்கவும் கூடாது. என எச்சரிப்பதாகவும் இவை இருக்கலாம்.

விசாரணைகளின் விபரம் வெளியிடப்பட்டால் உண்மைகள் தெளிவாகும்.

# குரும்பசிட்டியில் நல்லிணக்க சபை

வசாவிளான், ஞாயிறு

குரும்பசிட்டியில் நல்லிணக்கசபை ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது மைலிட்டி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஒரு உப குழுவாக செயற்படும்.

ஒரு சில மாதங்களின் முன் மேற்படி சபையின் செயலாளராக பணியாற்றிய திரு. வ குமாரவேலு ரோந்தில் வந்த இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து இச் சபையானது இதுவரை காலமும் செயலிழந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை இனப்பிரச்னை: பீகிங் பத்திரிகை கட்டுரை

[இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக பீகிங் றிவியூ பத்திரிகையில் இக்கட்டுரை வெளிவந்துள்ளது ]

தமிழில் தருபவர்: ந. சுரேந்திரன்

ஜூலை 13ல் துவங்கிய நேரடிப் பேச்சுவார்த்தைகளையும், ஜூலை 15ல் துவங்கிய சர்வகட்சி மகாநாட்டையும் அடுத்து இலங்கையின் இனப்பிரச்[illegible]யைத் தீர்த்துவைப்பதற்கான முயற்சிகள் உத்வேகம் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் 13 அரச துருப்புக்களைச் சுட்டுக் கொன்ற 1983 ஜூலை 13ல் இருந்து ஒரு கோடியே [illegible]0 லட்சம் மக்களைத் தன்னகத்தே கொண்ட இந்த நாட்டின் 18 சத வீதத்தினராகிய தமிழ் மக்கள் தொடர்ச்சியான அமைதியின்மையுள் தூக்கி எறியப்பட்டுள்ளனர் இன்று வரை 400 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர் 2500 கடைகளும் வர்த்தக ஸ்தாபனங்களும் மூடப்பட்டுள்ளன. ஒரு லட்சம் தமிழ்மக்கள் வீடிழந்து அகதிகளாகியுள்ளனர்.

தமிழ்ப் பிரிவினைவாதிகள் இலங்கையில் ஒரு சுதந்திரத் தமிழ்த் தாயகத்தை ஸ்தாபிப்பதைக் கோருகின்றனர். இக் கருத்தை இலங்கை அரசு கடுமையாக எதிர்க்கின்றது.

இதன் அடிப்படையில் போர் துவங்கிய காலத்தில் இருந்து இலங்கை அரசு பல தொடர்ச்சியான நடவடிக்கைகளை இப்பிரச்னையைத் தீர்ப்பதற்காக மேற்கொண்டது. ஆனல் அவை வெற்றி அளிக்கவில்லை.

கொழும்பு நகரில் உள்ள அரசியல் அவதானிகளின் கருத்துப்படி தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் இந்த நீண்டகால இனப்பிரச்னையைச்சமாதானமாகத் தீர்ப்பதில் ஒரு உண்மையானமுகற்படியைப் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன.

இத்தீவின் சிறுபான்மைத் தமிழர்களின் மிதவாத அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜூலை 13ல் இந்நாட்டின் தலைநகருக்கு விஜயம் செய்து ஜனதிபதி ஜே ஆர். ஜயவர்த்தனவுடன் அவரது அரசியல் அதிகார மாற்றப் பிரேரணைகள் அடிப்படையில் நாடு முழுவதும் உருவாகப்போகும் மாகாண சபைகளின் அதிகாரம்பற்றி இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர்.

விஷயம் அறிந்த வட்டாரங்களின் கருத்துப்படி இந்த இரு பகுதிகளும் அரசின் பிரேரணைகளை, பகுதிபகுதியாக ஆராய்ந்ததோடு ''ஒரு சுதந்திரமான மனம்திறந்த கருத்துப்பரிமாற்றத்தை'' ஒரு ''நட்புறவுச் சூழ்நிலையில்'' நடத்தின.

மேலும் பல வாரங்களுக்கு இப்பேச்சுவார்த்தைகள் தொடரும்.

கொழும்புக்கு வருவதற்கு முன்பு, த. வி கூட்டணி, தமிழ் தீவிரவாதக் குழுக்களுடன் இந்த அரசுப் பிரேரணைகள் விஷயத்தில் ஒரு பொதுக் கருத்தைக் கைக்கொள்வதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்தின. சென்னையில் இருந்து வெளிவந்துள்ள செய்திகளின்படி சில தீவிரவாதக் குழுக்கள் த. வி, கூட்டணி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட அனுமதித்துள்ளன, இருப்பினும் தங்கள் சார்பாக பேச்சுவார்த்தை நடத்த அனுமதி மறுத்துள்ளன. அத்தோடு இப் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் தங்களைக் கட்டுப்படுத்தமாட்டா என்றும் தெளிவுபடுத்தியுள்ளன.

நியூடெல்லியிலிருந்து வரும் பிந்திய செய்திகளின்படி, இந்திய அரசு தீவிரவாதக் குழுக்களின் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது பிரதான, தலையாய தீவிரவாதக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள், இந்தப் பிரேரணைகளபற்றிய எவ்வித விமர்சனமும் வெளியிடவும் தயாராக இல்லை ஏனைய குழுக்கள் இப்பிரேரணைகள்மீதான திருத்தங்களை ஆலோசனைப் படுத்தின ஆனல் அவை அனைத்தும் ஒரு அரசியல் தீர்வுக்கான அடிப்படையாக இந்தப் பிரேரணைகளை ஏற்க மறுத்தன

செவி வாயிலாகக் கேள்விப்படும் செய்திகளின்படி நியுடெல்லியில் பேச்சுவார்த்தை துவக்குமுன்பு தீவிரவாதிகள் கொழும்புப் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளை எதிர்பார்த்துள்ளனர்.

இந்த நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலையைக் குழப்புகின்ற எந்த நடவடிக்கையையும் எடுப்பதில்லை என்று அவை ஒத்துக்கொண்டுள்ளன. ஆனல் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராகத் தங்கள் கருத்துக்களை வெளியிட அனைத்தும் உறுதியாக உள்ளன.

அதேவேளை கடந்த மாதம் ஜனதிபதி ஜெயவர்த்தனவால் துவக்கப்பட்ட அனைத்து அரசியற்கட்சி மாநாடு இந்தப் பிரேரணைகள் மீதான தங்கள் கருத்துக்களை வெளியிடும் பணியை ஜூலை 15ல் துவங்கின

இதுவரை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் நவசமசமாஜக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்தும் அரசுப் பிரேரணைகளில் சில கருத்துக்களை மனதார வரவேற்றுள்ளன. இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இந்த அனைத்து அரசியற் கட்சி மாநாட்டைப் பகிஷ்கரித்துள்ளது,

ஸ்ரீ லங்கா மகாஜனக்கட்சியின பொதுச் செயலாளர் விஜயகுமாரணதுங்க மற்றும் தமிழர்களைப பெரும்பான்மையாகக் கொண்ட பலம்பொருந்திய பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நாட்டின் ஊரகத் தொழில்விருத்தி அமைச்சருமான எஸ் தொண்டமான் ஆகிபோரது விழுமிய செயல் நடவடிக்கைகளை கொழும்பிலுள்ள அவதானிகள் கோடிட்டுக் காட்டுகின்றனர் இந்த இரண்டுபேரும் இந்தியத் தென்னிந்திய மாநிலத்துக்குப் பல தடவை விஜயம் செய்ததோடு, இலங்கை இனப்பிரச்னையைத் சமாதானமாக தீர்ப்பதுபற்றி தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களோடு ஆலோசனை நடாத்தியுள்ளனர், இந்த தனிப்பட்ட பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவையாகக் கருதப்படுகின்றன.

-ஷாவ்ஷின்காவ்

இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் கொழும்பு, சென்னை, நியூடெல்கியில் நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் இலங்கையின் வடக்குக், கிழக்கு மாகாணங்களில் போர்நிறுத்தம் ஏற்படவில்லை அரசின் பேச்சுவார்த்தை மேசைக்கு தமிழ்த் தீவிரவாதிகளை இழுக்க ஒரு பிரயோசனமான போர்நிறுத்தம் தேவைஎன்று பலர் நம்புகின்றனர்.

இந்தப்போரினல் இலங்கையின் பொருளாதாரம் வெகு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 1984ல் 990 7 கோடியாக இருந்த அதன் வர்த்தகப் பற்றுக்குறை தற்போது அதன் தேயிலை, றப்பர் ஏற்றுமதி விலைகள் அளவுக்கதிமாண வீழ்ச்சி காரணமாக 1403 7 கோடியாக (அமெரிக்க டொலர் 519 7) அதிகரித்துள்ளது.

மே மாதம் 3ல் கொழும்பு விமானநிலையத்தில் ஒரு ஏர் லங்கா விமானம் வெடித்துச் சிதறியதில் 19 பேர் இறந்தனர். 24 பேர் காயமுற்றனர் இந்த வெடி விபத்து நாட்டின் பிரதான வருமான காரணியான உல்லாச பயணத்துறையை வெகுவாகப் பாதித்தது.

ஆகவே நாட்டின் சுதந்திரம், அரசுரிமை பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு இடர் ஏற்படு முன்பு இந்த இனப்பிரச்னை வெகுவிரைவில் தீர்க்கப்படுமென்று நம்பப்படுகின்றது.

## நல்லை அப்பன்

ஈண்டுந் தமிழர்க் இனிய தமிழிறைவன்
ஆண்டருள்வான் நல்லை அப்பனவன்- நீண்ட
குன்றம் பிளந்து குறைதீர்த்த மாமுருகன்
என்றும் அருள்பொழிவான் ஏத்து

★ ★ ★ ★

உளங் குமுறும் உத்தம நற்றமிழர்
உள்ளங் குளிர்விப்பான் உண்மையாய்-வள்ளலாம்
நல்லைப் பதிமுருகன் ஞானத் தமிழிறைவன்
தொல்லை தவிர்ப்பான் துதி

★ ★ ★ ★

ஊர்த்துவலிங் கன்குமரன் கம்பர்தொழும்-
நற்றலைவன்
ஊர்த்துவலோ கம்புரந்த உத்தமனும்
ஆர்த்தெழுந்த
சங்கிலியன் ஆண்டநல்லைச் சண்முகன் ஈண்டு வந்து
இங்கிதமாய் ஆள்வான் எமை.

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

● இன்று நல்லூர்க்கந்தன் 2-ம் திருவிழா.

## கடைசி நேர வரி விளம்பரம்


### விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள பாவனையிலுள்ள பெரிய "Usha" குளிர் சாதனப் பெட்டியும், Singer குளிர்சாதசாதனப்பெட்டியும், புதிய Singer தையல் மெஷின், zigzag bobina magka270 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: No 7, சஸ்தூரியார் ஒழுங்கை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (C 4003)

### தவறிவிட்டது

07-08-86 அன்று கைதடிக்கும் கோப்பாய்க்குமிடையில் அப்துல் ரஹீம் உவைஸ் ஆகிய எனது அடையாள அட்டை தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் அவ் விலாசத்திற்கு அல்லது ஐந்து சந்தி சீக்கோ ஹோட்டலில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 4006]

### அதிஸ்டலாபச்சீட்டு

ஸ்டார் சைக்கிள் வேக்ஸ் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் இடம்பெற்ற அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு [10-08-1986] மகேஸ்வரன் உமாநாத் [வயது 3] என்பவரால் அதிஸ்டம் பார்க்கப்பட்டது பரிசுக்குரிய சீட்டிலக்கம் - 00358 செந்தூர் எஜன்சீஸ், நெல்லியடி. உரிய இலக்கமுடையவர் வந்து பரிசைப் பெற்றுக் கொள்ளலாம். ஸ்டார் சைக்கில் வேக்ஸ், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. [C 4008]


### கலைவிழா

ஒட்டுசுட்டான் ஞாயிறு

கற்சிலைமடு அ.த.க. பாடசாலை மாணவரின் கலைவிழா அண்மையில் நடைபெற்றது. (இ)


### லிடோ

காலை 10-30, 2-30, 6-30

பாண்டியன் - ரேவதி நடித்த

**புதுமைப் பெண்**

[புதிய பிரதி கலர்]

அடுத்த படம்

GOLDEN DRAGON SILVER SNAKE (Karate and Action Colour)

### வெலிங்டன்

வெண்திரையில்

10-30, 2-30, 6-30

இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த

சிவாஜி, ஜமுனா வீரப்பா, நம்பியார்

**தங்கமலை ரகசியம்**

[புத்தம் புதிய பிரதி] இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது

Now Showing

**வின்ஸர்** திரையில்

10-30, 2, 4-30, 7-30

விறுவிறுப்பு, திகில், மர்மம், மயிர்கூச்செறியும் நவீன கராட்டிச் சண்டைகள் நிறைந்த அற்புத ஓவியம்.

Brucelee in CH LLENGE

(வயது வந்தோர்மட்டும்)


# பொலிஸ் நிலையத்துக்குள் ரூபா 500 போலி நோட்

கொழும்பு, ஞாயிறு

வவனியா பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்புப்பெட்டியில் போலி 500 ரூபா நோட்டு ஒன்று இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் நிசேர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்த ஒருவரே இப்போலி நோட்டைக்கண்டு பிடித்தாராம்.

இப் போலி நோட் எவ்வாறு பொலிஸ் நிலையத்தினுள் வந்தது என்பது பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (கூ - ஊ)

## 'ஏயர் லங்கா' குண்டுவெடிப்பு:

# வழக்குத் தொடருவதில் சங்கட நிலை!

கொழும்பு, ஞாயிறு

கடந்த மே மாதம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்ற 'ஏயர் லங்கா' விமானக்குண்டு வெடிப்பு தொடர்பாக வழக்குத்தாக்கல் செய்வதில் குற்றப் புலனாய்வுத் துறையினர் பலத்த சங்கடத்தை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 'ட்ரை ஸ்டார்' விமானக் குண்டுவெடிப்புத் தொடர்பாக 15 சந்தேக நபர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் புலன் விசாரணைகளின் போது இவர்கள் அனைவரும் தாமே அச்சம்பவத்துக்குப் பொறுப்பென்று கூறிவருகின்றனராம்.

இந்நிலையில் எவர்மீது குறிப்பாக வழக்குத் தொடருவது என்பதிலேயே சங்கடமேற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பதினைந்து சந்தேக நபர்களில் 3 பேர் சுங்கப் பகுதியினர், 5 பேர் புறக்கோட்டை வர்த்தகர்கள், 7 பேர் ஏனைய வேறு நபர்களாவர், என்று தெரிவிக்கப்பட்டது.

## மாகாணசபை எதிர்ப்பு:

## ஸ்ரீ. ல. சு. க, மகாசங்ககூட்டு

# முயற்சி தோல்வி?

கொழும்பு ஞாயிறு

அரசாங்கத்தின் உத்தேச மாகாணசபைத் திட்டத்திற்கெதிராக கூட்டாக இணைந்து போராட்டத்தை நடத்துவதில் இணக்கம் காண சுதந்திரக்கட்சியும் மகாசங்கமும் தவறிவிட்டதாகத் தெரியவருகிறது.

மாகாண சபைத் திட்டத்திற்கெதிரான போராட்டத்தை ஒன்றிணைத்து நடத்துவதுசம்பந்தமாக சு.க. தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அஸ்கிரிய பீடாதிபதி வண. பலிப்பானந்த தேரோவும் சனிக்கிழமை கூடி ஆராய்ந்தனர்

ஆயினும் இக் கூட்டத்தில் இருதரப்பினரும் இணக்கமான முடிவெதுவும் எடுக்கவில்லையெனவும் இதனையடுத்து இந்த மாகாண சபைத் திட்டத்தை எதிர்த்து சு கட்சி அரசியல் ரீதியிலும் மகாசங்கம் மதரீதியிலும் போராட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. [கூ-ஊ]

## ஐரோப்பிய —

# இறக்குமதிப் பொருட்கள்மீது கதிரியக்க பரிசோதனை

கொழும்பு, ஞாயிறு

ஐரோப்பியநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும்சகலஉணவுப்பொருட்களிலும் அணுசக்தி கதிரியக்கத் தாக்கம் காணப்படுகின்றனவா என்பது பற்றி பரிசோதனைகள் மேற்கொள்ளப் படவுள்ளது

சோவியத்யூனியனின் சேர்னோபில் அணுநிலையத்தில் ஏற்பட்ட விபததின் காரணமாக அந்த நிலையத்திலிருந்து அண்டைய நாடுகளுக்கும் கதிரியக்கம் பரவியதையடுத்தே இலங்கை அரசு இந்நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. (கூ-ஊ)

## கண்டிப்புச் சுவரொட்டிகள்

நயினாதீவு, ஞாயிறு

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணியம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நடைபெறுவதை கண்டித்து பல முக்கிய இடங்களில் பெயர் குறிப்பிடப்படாத சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

## நல்லூரில் தங்கச் சங்கிலிகள் திருட்டு

வேலணை ஞாயிறு

நேற்று ஆரம்பமாகிய நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது, உள் வீதியில் சுவாமி தரிசனம் செய்து கொண்டு நின்ற எட்டுப்பேரின் தங்கச் சங்கிலிகள் திருடப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது.

கந்தசாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் நேற்றுக் காலை 10 மணிக்குத் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பக்தர்களின் நலன்கருதி இவ்வருஷம் ஆங்காங்கேவீதித் தடைகள் அமைக்கப்பட்டு தொண்டர்கள் கடமையிலீடுபட்டிருந்தனர். சென் ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்கள் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை நல்லை ஆதீனம், சாரணச்சேவை ஆகியவற்றில் தொண்டர்கள் கடமையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர் ஆயினும்கோவில் உள் வீதியில் எந்தவொரு ஸ்தாபனத்தின் பிரதிநிதியும் சேவையிலீடுபடுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டரை லட்சம் பேருக்கு உணவு முத்திரை

கொழும்பு, ஞாயிறு

தற்போது உணவு முத்திரையைப்பெற்று வருவோரின் எண்ணிக்கையை மேலும் இரண்டரை லட்சத்தால் அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மேலதிகமாக வழங்கப்படவுள்ள இம் முத்திரைகளைப் பெற தகுதியுடையோர் குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை

இலங்கையில் இப்போது சுமார் 74 லட்சம் மக்கள் உணவு முத்திரைகளைப்பெற்று வருகின்றனர். [உ-ஊ]

## மத்தியஸ்தர் சங்க

# புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம். திங்.

யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்:

தலைவர்: திரு ஈ. கே. குமரையா, காரியதரிசி: திரு. ஏ தேவராசா, தனாதிகாரி: திரு என் எஸ். முருகேஸ், உப-தலைவர்கள்: திருவாளர்கள் கே ஐத்துகுலசிங், எம் டி. தம்பிராசா, ஏ. செபஸ்தியாம்பிள்ளை, எம். பேரின்பநாயகம், எஸ். எம். மாட்டீன், உப-காரியதரிசி: திரு. ஏ டி. எம். குணசிங்கம் நிர்வாக உப-குழு அங்கத்தவர்களாக திருவாளர்கள் பி. ஆர். தம்பிநாயகம், எஸ். கே செபஸ்தியாம்பிள்ளை, எஸ். அமிர்தநாதர், கே. டபிள்யூ. விமலராஜா, எஸ். தேவபாலசுந்தரம், ஏ. திருஞானசம்பந்தர்.

'மேற்படிப் பொதுக் கூட்டத்துக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் சமூகம் கொடுத்திருந்தது, இது முதல் தடவை'யென, மேற்படி சங்கத்தின் புதிய தலைவர் திரு. ஈ. கே. குமரையா தெரிவித்தார். (வி)

### 16 பேர்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

நேற்றுக்காலை கைது செய்யப்பட்ட 16 இளைஞர்களும் செங்கலடியில் உள்ள பாடசாலை ஒன்றில் வெகு நேரம் வரை கட்டிவைக்கப்பட்டிருந்தனர்:

கட்டிவைக்கப்பட்டிருந்த அவ் விளைஞர்கள் நேற்று மாலை கரடியனாறு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். [மா]

### தனிநாட்டை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வுச்செயலர் திரு வெங்கடேஸ்வரன் கொள்கை வகுக்கும் கமிட்டித்தலைவர் திரு பார்த்தசாரதி ஆகியோரைச்சந்தித்து இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்து பேச்சுக்கள் நடத்திவிட்டுத் திரும்பியது தெரிந்ததே. அப்போதே இவ் வுறுதிமொழி அளிக்கப்பட்டதாக புரொன்ட்லைன்' தெரிவிக்கிறது.

இலங்கையில் ராணுவ ரீதியில் இந்தியா தலையிடாது எனவும் இவ்விரு ராஜதந்திரிகளும், இப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது,

இதேவேளை, இலங்கையரசின் புதிய யோசனைகள், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படையானவையாக அமையவில்லை என்பதில் போராளிப் பிரதிநிதிகள் உறுதியாக விருந்ததாகவும்' இந்த யோசனைகளை தாம் நிராகரிப்பதற்கான காரணத்தை ஈழ தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த அமைப்புகள் மகஜர் மூலம் இந்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் 'புரொன்ட் - லைன் கூறியுள்ளது, (கூ - ஊ)

### முன்னாள்---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

குரிய ஒருவராகவும் இவர் விளங்கினார். 1984ம் ஆண்டு ஜூன்மாதம் பொற்கோயிலுக்குள் இந்திய இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்நடவடிக்கைகளின் மேற்பார்வையாளர்களில் ஒருவராகவும் இவர்கடமையாற்றினார்.

ஜெனரல் வைத்யாவுக்கு அண்மையில் பலதடவைகள் கொலைப் பயமுறுததல்கள் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [செ]

### 15 அடி—

(1ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த நேரடி மோதலைத் தொடர்ந்தே ஷெல் தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டனர். (ச]

### வாழைப்பழ...

[1ம் பக்கத் தொடர்ச்சி].

லக்கிடமாகவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

**காயமடைந்தோர்**

காயமடைந்த ஏனைய நபர்களின் பெயர்விபரம்வருமாறு:

கொட்டடியைச் சேர்ந்த அமின் (வயது 13), புங்குடுதீவு எஸ் ஜெகதீஸ்வரன் வயது22] கன்னாதிட்டி பன்னீர்ச்செலவம் (வயது 23], சுழிபுரம் அனுஷ்யா [வயது 21]

இதேவேளை நேற்றுப்பகல் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் காரியாலத்துக்கு முன்னால் மற்றொரு 'ஷெல்' வீழ்ந்து வெடித்தது. அக் காரியாலயமும அருகில் உள்ள மாணவிகள் விடுதியும வகுப்பறைகளும் சேதமடைந்தன. விடுமுறை தினமாக இருந்தபடியால் அங்கு ஆட்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

மற்றொரு ஷெல் யாழ் நிம்மர் மண்டபத்தின் கூரைமேல் வீழ்ந்ததனால் கூரைபிரிந்து ஓடுகள் உடைந்தன.

மணிக்கூடுவீதியில் வீழ்ந்த ஷெல் வெடித்ததில் வீதியில இரண்டடிக்குமல ஆழமான குழி தேண்டப்பட்டு நீர் விநியோக குழாய் ஒன்று உடைந்து நீர் வழிந்துஓடிக்கொண்டிருந்தது.

மற்றொரு ஷெல் விக்டோறியா வீதியில் விழுந்தது இச் சமயமே ரியூசனுக்குச் சென்று விட்டுத் திருமபிக் கொண்டிருந்த அனுஷ்யாஎன்றமாணவி காயமடைந்தார்.

கொட்டடி வீதியில் வீழ்ந்த மற்றொரு ஷெல் வெடித்துச் சிதறிய போது சிலகட்டிடங்கள் சேதமடைந்தன.

வின்சர் படமாளிகைக்கு முன்பாகவுள்ள குளத்திதுள் ஒரு ஷெல் விழுந்துள்ளது. (ச)

### கல்முனையில்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அதனாலேயே அவருக்கு மரண தணடனை வழங்சப்பட்டதாகதெரிவிக்கப்பட்டது இச்சம்பவத்துக்கும் கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் தெரிவிககப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக முஸ்லிம் கோஷ்டியினர் அப்பாவித் தமிழரை தாக்கியது தொடர்பாக கல்முனைத் தமிழர் வட்டாரத்தில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்புக்கும் கல்முனைக்குமிடையே நேற்று போக்குவரத்துச்சேவைகள் இடம்பெறவில்லை. கல்முனை நகரில் சகல கடைகள், வர்த்தகஸ்தாபனங்கள் மூடப்பட்டிருந்தன சன நடமாட்டம் இருக்கவில்லை.

திடீரென வெடித்த இக் கலவரத்தை அறிந்த மட்டக்களப்பு பிரஜைகள் குழு செயலாளர் சட்டத்தரணி சாம். தம்பிமுத்து இணைப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். நேற்று நண்பகலுக்குப் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் ஈழநாடு நிருபருக்குத் தெரிவித்தார். [மா]

## தடுப்புக் காவலிலுள்ள

# தமிழ் இளைஞர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம்

கொழும்பு, ஞாயிறு

தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ள தமிழ் இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்றினை அரசு பரிசீலித்துவருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களின் மூலம் தெரிய வந்துள்ளது.

தற்பொழுது ஏமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் முகாம்களில் தடுப்புக் காவலில்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினை தீர்வுகுறித்து தற்பாழுது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் ஒரு சமாதான முடிவினை எட்டும் பட்சத்திலேயே இந்த புனர்வாழ்வு நடவடிக்கை அமுலுக்கு வரலாம்என்று கூறப்படுகிறது.

இத்திட்டம் அமுல்படுத்தப் படும்பட்சத்தில் தடுப்புக்காவலில் உள்ள இளைஞர்களின் தகைமைகளுக்கேற்ப வேலை வசதி, உயர்கல்வி வசதி மற்றும் தொழிற்பயிற்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்படும் எனறும் கூறப்படுகிறது. [ரா]

## வவனியா இணைப்பதிகாரி

# ஓமந்தை விஜயம்

வவனியா, ஞாயிறு

வவனியாமாவட்ட இராணுவ இணைப்பதிகாரிகேர்ணல் கொப்பேகடுவ, ஓமந்தைப் பகுதிக்கு நேற்றுக் காலை விஜயம்செய்து அங்குவாழும் மக்களைச்சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

இச் சந்திப்பின்போது மருதமடு, ஓமந்தை பகுதி கிராம சேவையாளர்களும், வட பிராந்திய இ. தொ. கா. தலைவர் திரு. பி மதுரப்பிள்ளை, வவனியா பௌத்த விகாரையின் பிரதம பிக்கு வண விமல சாராதேரோ ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

ஓமந்தைக்கு எரி பொருளை கொண்டுவந்துவிற்பனை செய்ய யாராவது முன்வந்தால் சகல உதவிகளையும் அளிக்க உறுதியளித்த இணைப்பதிகாரி ஓமந்தையில் உள்ள வயல் வெளிகளில் வேளாண்மை செய்யும் படியும் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

ஓமந்தையில் கைதான இளைஞா குறித்து அவர்களின் பெற்றோர் இணைப்பதிகாரியிடம் கூறியபோது அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கத்தாம் ஆவன செய்வதாக கூறினர்.

இவ்விஜயத்தின்போது ஓமந்தையில் அமைதியை நிலைநாட்டவென இப்பகுதிப் பிரமுகர்களைக் கொண்ட சமாதானகுழுவொன்றும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. [ஊ]

## 'பழைய மாணவரின் சேவை கல்லூரிக்கு அவசியம்தேவை'

### — அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"ஒரு கல்லூரியின் முன்னேற்றத்திற்கு அக்கல்லூரியின் பழைய மாணவரின் அபிமானத்துடன் கூடிய சேவையே உந்துசக்தியாக அமைகின்றது" என்று வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி அ. இராஜரத்தினம் தெரிவித்தார்

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்தின்போது பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் இணைச்செயலாளர் திருமதி அ பாலச்சந்திரமூர்த்தி கல்லூரி அதிபரிடம் மின்விசிறி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

பழைய மாணவரான திரு. கா. மாணிக்கவாசகர் பேசும்போது; 'ஆறுமுகநாவலர் பெருமானுக்கு யாழ். மத்திய கல்லூரியலும் பார்க்க வேம்படி மகளிர் கல்லூரியுடனே அதிக தொடர்பு இருக்கிறது' என்று கூறினார்.

புதுவருடத்துக்கான உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: செல்வி எம். தம்பையா செல்வி கி வடிவேலு, தலைவர்: கல்லூரி அதிபர் திருமதி அ. இராஜரத்தினம், இணைச்செயலாளர்கள்: செல்வி ஜே. பரமசோதி, திருமதி எஸ். இராஜரத்தினம், பொருளாளர் திருமதி ப. சண்முகராஜா, மற்றும் நிர்வாகக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. [ஒ-இ]

## துர்க்கை அம்மன் உற்சவம்:

# மல்லாகம் வீதிகளில்கூடுதல் வெளிச்சம் போடமுடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

அடுத்த் மாதம் ஆரம்பமாகவுள்ள துர்க்கையம்மன் ஆலய திருவிழாவையொட்டி மல்லாகத்திலிருந்து மேற்படி ஆலயம் வரையிலான வீதியில் 'ரீயூப் லைற்'றுக்களை அமைத்துக கொடுப்பசென மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கம் ஏகமனதாக தீர்மானித்துள்ளது

சங்கத் தலைவர் திரு. ஸ்ரீ. பாஸ்கரன் தலைமையில் கடநத வாரம் இடம்பெற்ற செயற்குழு கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த மின்விநியோகத்தைப் பராமரிக்கும் பொறுப்பினை யாழ். அபிவிருத்திசபையின் தெல்லிப்பளை உபஅலுவலகம் ஏற்றுள்ளது

மேற்படி செயற்குழுக் கூட்டத்தில் கடந்த சில மாதங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட வெளிநாட்டுக் கடிதங்களை தபாற் சந்தோர் சீல் அடிக்காது பெட்டியினுள் போட்டும், அவை உரியவர்களுக்கு சென்று கிடைத்துள்ளமை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

சங்க ஆதரவில் நடாத்தப்பட்ட தையல் வகுப்பு குறித்தும், நெதர்லாந்து அரசாங்கத்தால் அவ்வகுப்புகளுக்கு வழங்கப்பட்ட மூன்று தையல் மெஷின்கள் குறித்தும் செல்வி தங்கபமா அபபாகுட்டியின நன்றி தெரிவிக்கும் கடிதமும் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. [ரா]

## அமரர் கந்தசாமி

பல பொதுத்தொண்டுகளில் ஈடுபட்டு சேவையாற்றி நேர்மையாகவும் கண்ணியமாகவும் நடந்து மக்களின் பெருமதிப்பைப்பெற்றவர் அமரர் வை. கந்தசாமி. தென் அல்வையூரில் நிறுவப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளையொன்றின் செயலாளர் பதவி வகித்து அக்கிளையை மிகவும் சிறப்பாக நடாத்திய பெருமையும் இவருக்குண்டு.

பலகாலம் ஆசிரியராகவும் அதிபராகவும் இலங்கையில் பல இடங்களில் சேவைசெய்து அல்வாய் சிவனைத்தம்பி வித்தியாலயத்திலிருந்து தனது அறுபதாவது வயதில் இளைப்பாறினார்.

இவர் தேவார திருவாசகங்களைப் பண்ணுடன் பாடும் வல்லமையும் பெற்றவர். இவர் கைவினைத்திறன் படைத்த ஒரு ஆசிரியராவார். தனது சுற்றத்தாருக்குப் உறவினருக்கும் உதவி செய்வதில் தன் ஓய்வு நேரத்தை இவர் கழித்தார்.

\- சி. பாலசிங்கம்

## பொதுக்கூட்டம்

வவனியா, ஞாயிறு

வவனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் 36வது வருடாந்த பொதுக் கூட்டம் சங்கமண்டபத்தில் தலைவர் திரு எம் பாலசுப்பிரமணியம் தலைமையில் எதிர் வரும் 16ம் திகதிகாலை நடைபெறவிருக்கிறது.

## சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை

வவனியா, ஞாயிறு

சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை வவனியாவில் நாளை 12ம் திகதி சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

வவனியா முல்லைத்தீவு சைவ ஊழியர் சபையும், மேற்படி இந்து இளைஞர் சங்கமும் இணைந்து குருபூசையை நடாத்தவுள்ளன (இ)

## இடமாற்றம்

நெல்லியடி, ஞாயிறு

நெல்லியடிபட்டினசபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு க சண்முகநாதன் பருத்தித்துறை நகர சபைக்கு பதவி உயர்வுடன் இம்மாதம் 6-ம் திகதி தொடக்கம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். [இ]

## அபிவிருத்திசங்ககூட்டம்

காரைநகர் ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் அதிபர் திரு. கே அருணசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## விளையாட்டு விழா

கிளிநொச்சி, ஞாயிறு

தனங்கிளப்பு ஸ்ரீ முருகன் சன சமூக நிலையதத்தின் விளையாட்டுக்கழக வருடாந்த விளையாட்டு விழா தனங்கிளப்பு விளையாட்டுத்திடலில் கடந்த ஞாயிறு நடைபெற்றது.

இவ் விளையாட்டு விழாவிற்கு இளைப்பாறிய ஆசிரியர் வே. இரத்தினம் தலைமை தாங்கினார் பிரதம விருந்தினராக தனங்கிளப்பு இணக்கசபைத் தலைவர் திரு பொ. நமசிவாயம் கலந்து கொண்டார்.

இல்லங்களிற்கிடையே நடைபெற்ற போட்டியில நேரு இல்லம் முதலாம் இடத்தையும், காந்தி இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

பாலர் பிரிவிற்கான போட்டிகளில் ஸ்ரீ முருகன் பாலர் பாடசாலை முதலாம் இடத்தையும், நேரு பாலர் பிரிவு இரண்டாம் இடத்தையும், அறவளி பாலர் கழகம் மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (இ)

## நயினதீவில் கண்காட்சி

இருப்பிட்டி ஞாயிறு

நயினதீவு பாடசாலை மாணவர்களின் கைவண்ணத்தினால் உருவான கல்வி பொருட்காட்சி நயினதீவு மகா வித்தியாலய அரங்கில் சென்ற வாரம் நடாத்தப்பட்டது

முன்னாள் புங்குடுதீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு க.குகதாசன் கண்காட்சிநுழைவாயிலை திறந்து வைத்தார் நயினதீவு வட்டாரத்தில் உள்ள பாடசாலை, மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் கைவண்ணத்தில் உருவான பொருட்கள் இப்பொருட்காட்சியில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

இருப்பிட்டி, ஞாயிறு

தீவுப்பகுதி விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இம்மாதம் 16-ம், 17-ம் திகதிகளில் புங்குடுதீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் சிவலட்பிட்டிசனசமூக நிலையம், பெருங்காடு சனசமூக நிலையம், பாரதி சனசமூக நிலையம், காந்திஜி விளையாட்டுக் கழகம், பிரான்சிஸ் சனசமூக நிலையம் ஆகியன கலந்துகொள்ள விருக்கின்றன மேற்படி போட்டிகள் விளையாட்டு அதிகாரி கே. பீலிக்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது [இ]

## மிளகு விலை குறைவு

கொழும்பு சனி

கொஸ்லாந்தை, கம்பஹா, ஊவா, ஹப்புத்தளை ஆகிய இடங்களில இம்முறை அதிகளவு மிளகு பயிரிடப்பட்டதால் மிளகின்விலை குறைவடைந்துளளது.

முன்னர்கிலோ 150 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட மிளகு தற்போது கிலோ 70 ரூபாவாக குறைவடைந்துள்ளது. [ ]

## முதலாவது நினைவஞ்சலி

வவனியா, ஞாயிறு

வவனியா லிங்கம் தோட்டத்திலும் அதனை சுற்றியுள்ள பகுதியிலும் கடந்த வருடம் இடம்பெற்ற அசம்பாவிதத்தின்போது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு முதலாவது ஆண்டு நினைவஞ்சலி ஆடி அமாவாசை தினத்தன்று வவனியா கந்தசுவாமி கோவிலில் விசேட பூசை பிரார்த்தனையுடன் இடம்பெற்றது வவனியா இந்து மாமன்றம் இதற்கான ஏற்பாட்டினை செய்திருந்தது. [இ]

## இலவச தையல் பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி, ஞாயிறு

சாவகச்சேரிப்பகுதியில் உள்ள யுவதிகளின் நன்மை கருதி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இலவச தையல் பயிற்சி வகுப்பை நடத்தமுன் வந்துள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்து தையல் கலையை கற்க விரும்புவோர் டச்சு வீதியில் உள்ளலயன்ஸ்கழக செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்புகள் செவ்வாய் வியாழன் ஆகிய இரு நாட்களும் முழுநேரமாகநடைபெறும். [இ]

## போட்டி பரீட்சை

கொழும்பு, ஞாயிறு

விசேஷதர சுகாதார பொதுச்சேவை பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப்பரீட்சை செப்டம்பர் மாதம் 13ம் 14ம்திகதிகளில் நடைபெறவுள்ளது

சுகாதாரசேவையில் திருப்திகரமாக சேவை யாற்றியவர்கள் மட்டுமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டிருந்தனர்.

இதற்கான பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலம் நடைபெறவுள்ளது. (சி-இ)

## ஒக்ஸ்பாம் உதவி

வல்வெட்டித்துறைஞாயிறு

1984ம் வருடம் வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் இராணுவத்தினர்மீது கண்ணிவெடித்தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்துஇராணுவத்தினர் நெடியகாடு பொலிகண்டி, ஆதிகோவிலடி ஆகிய பகுதிகளில் நடத்தியதாக்குதல்களில் பாதிக்கப்பட்ட சுமார் 400 குடும்பங்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் வழங்கப்பட்ட சுமார் ரூபா 500 பெறுமதியான 1பெட்சீட் 2துவாய், 1வேட்டி, 1 நைலக்ஸ் சாறி, 1சேட் துணி, 1 பாவாடைத் துணி, 2வெள்ளைத்துணி ஆகியன அடங்கிய பொதி ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் யாழ்வை.எம் சி ஏ. அலுவலகத்தில்வழங்கப்பட்டது

இவ்வன்பளிப்புப் பொதிகளை பெறுவதற்கான நடவடிக்கைகளையும், போக்குவரத்து வசதிகளையும்வல்வைஅகதிகள் புனர்வாழ்வுசபையினர்ஒழுங்குசெய்திருந்தனர்.

## இளைப்பாறும் ஆசிரியருக்கு பாராட்டு

நெல்லியடி வியாழன்

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரிய சேவையிலிருந்து பின்னர் கடந்த 6ஆண்டுகளாகக் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு மு. சந்தையாவின் ஓய்வுதினவிழா மேற்படி வித்தியாலயத்தில் புதிய அதிபர் பொ. பாலச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

உடுப்பிட்டி வட்டாரக்கல்வியதிகாரி திரு.வீ கே. ஈசுரபாதம் பாராட்டுரை வழங்கிய போது திரு சந்தப்பு நாட்டின் பல பகுதிகளிலும் திறம்படக் கடமையாற்றியதுடன் ஒரு கவிஞராகவும் தொழிற்சங்கவாதியாகவும் சிறந்த நிர்வாகியாகவும் திறமைமிக்க ஆசிரியராகவும் சமூகசேவையாளராகவும் விளங்கினரென்றும் எதிர்கால ஆசிரியர் பரம்பரைக்கு ஒரு முன்னோடியாக விளங்கும்தகுதி பெற்றவரென்றும் குறிப்பிட்டார்

திருவாளர் க. சிவஞானம் [இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர்] சிறப்புரைநிகழ்த்தினர். (சி-இ)

# பசுபிக் சமுத்திரத்தில் சோவியத் ஏவுகணை சோதனை!

## பிறநாட்டுக்கப்பல் நடமாட்டத்தை தவிர்க்கும்படி கோரிக்கை

மாஸ்கோ, ஆக-10

பசுபிக் சமுத்திரத்தில் இம்மாதம் பன்னிரெண்டாம் திகதி முதல் இருபத்திரெண்டாம் திகதிவரை ஏவுகணைப் பரிசோதனையை நடத்தப்போவதாகச் சோவியத் யூனியன் சர்வதேச ரீதியில் சகல நாடுகளுக்கும் அறிவித்துள்ளது.

சோவியத் யூனியனின் ஆசியக் கரையோரத்தில் நடமாடக்கூடிய நீர்மூழ்கிக் கப்பல்களை நிர்மூலமாக்குவதற்கான ஏவுகணைகளே இவ்விதம் பரிசோதிக்கப்பட விருப்பதாக மேற்கத்திய இராணுவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

இப்பரிசோதனை தினமும் காலை ஆறு மணி தொடக்கம் இரவு ஏழு மணிவரை நடைபெறும் என்றும், இந்நாட்களில் இப்பகுதிகளில் ஏனைய நாடுகளின் கப்பல்களோ, விமானங்களோ நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று சோவியத் யூனியன் ஏனைய நாடுகளுக்கு முன்னறிவித்தல்கொடுத்துள்ளது.

[ஒ-அ]

## 'புலிகளின் குரல்'

யாழ்ப்பாணம், திங்கள்.

வட பகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்கு ஆயுதங்கள் ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று கொழும்பிலிருந்து புறப்பட்டு வருவதாக 'புலிகளின் குரல்' தெரிவித்துள்ளது.

(மா)

## கேரளத்தில் 4குழந்தைகள் பலி

பெங்களூர், ஆகஸ்-10

கேரளத்தில் நேற்று இடுக்கி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச் சரிவொன்றில் நான்கு குழந்தைகள் இறந்துள்ளனர். ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

(இ)

## எலிசபெத் மகாராணிக்கு இருதயநோய் பரிசோதனை

லண்டன், ஆகஸ்-10

பிரிட்டனிலுள்ள மிகச் சிறந்த இருதய நோய் ஆஸ்பத்திரியில் கடந்த வாரம் பலத்த பாதுகாப்புடன் எலிஸபெத் மகாராணியின் இருதய நோய் தொடர்பாகப் பரிசோதனை நடத்தப்பட்டதாகப் பிரிட்டிஷ் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆஸ்பத்திரியின் பின் வாசலினூல் உள்ளேசென்ற மகாராணியார் சுமார் ஐம்பது நிமிடம் வரை வைத்திய பரிசோதனைக் குட்படுத்தப்பட்டதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

மகாராணியாரின் இருதயத் துடிப்புப்பற்றி நவீன இயந்திரங்களின் உதவியுடன் பரிசோதனை செய்யப்பட்டது.

(ஒ)

பிரிட்டனில்———

## வேறுஇனக்குழந்தைகளுக்கு குடியுரிமை சலுகைகள்!

லண்டன், ஆகஸ்-10

பிரிட்டிஷ் குடியுரிமைபெற்ற ஆங்கிலேயரல்லாத வேறு இனத்தவர்கள் விஸா அல்லது கடவுச் சீட்டுக்கள் இன்றித் தமது குழந்தைகளைப் பிரிட்டனுக்குக் கொண்டுவர அனுமதியளிக்கப் பட்டுள்ளது

பங்களாதேஷ் இளைஞர் ஒருவர் தமது குடியேற்றப்பிரச்னை ஒன்று தொடர்பாக லண்டன் அப்பீல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்திருந்தார் இறுதியாக அவ்வழக்கின் தீர்ப்பிலேயே மேற்கண்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது

அத்தீர்ப்பின் விபரம் வருமாறு:- கடவுச்சீட்டு அல்லது விஸாவின்றிப் பிரிட்டனில் வசிக்காத ஆனல் பிரிட்டிஷ் குடியுரிமைபெற்ற வேறு நாட்டவர் அல்லது இனத்தவர் தமது குழந்தைகளைப் பிரிட்டனுக்குக் கொண்டுவர முடியும்.

இக்குழந்தைகள் விடயத்தில் குடியேறறப் பகுதி அதிகாரிகளுக்குத் தகுந்த ஆதரங்களைச் சமர்ப்பிக்க முடியா விட்டாலும் கூடப் பிரிட்டனுக்குள் நுழைந்தபின்னர் அந்த ஆதாரங்களை வழங்கக்கூடிய வழிவகைகளையும் இத்தீர்ப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை இனப்பிரச்னை———

## தீர்வு காண முன்வருமாறு சோவியத் நண்பர்கழகம் வேண்டுகோள்

சென்னை, ஆகஸ்-10

இலங்கை இனப்பிரச்னைக்கு நியாயமான தீர்வுகாண முன்வரவேண்டுமென்று இலங்கை அரசையும். இலங்கைத் தமிழ் அமைப்புகளையும் சோவியத் நண்பர் கழகத் தமிழ் நாடு பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

மேற்படி கழகம் தன் செயற்குழுக் கூட்டம் நேற்றுச் சென்னையில் கூடியபோது இவ்வாறு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது.

[ஒ]

## ரூபவாஹினி கல்விச் சேவை

யாழ்ப்பாணம், திங்கள்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் கல்விச் சேவைப்பிரிவு தனது முதலாவது பரீட்சார்த்த விடுமுறைக்கால ஒளிபரப்பு சேவையை இன்று திங்கள் முதல் ஆரம்பிக்கவுள்ளது

இந்த ஒளிபரப்புச் சேவை கிழமை நாட்களில் தினமும் காலை 9 மணிமுதல் மு.ப11-30 மணிவரை நாலுவாரங்களுக்கு தொடர்ந்து இடம் பெறும்.

(சி- எ)

அமெரிக்காவில்———

## போதைவஸ்து கடத்தல் தொடர்பாக 12 பேர்மீது வழக்குத்தாக்கல்

நியூயோர்க், ஆகஸ்-10

அமெரிக்காவின் பென்சில்வேனியா வாடகை விமான நிறுவனத்துடன் தொடர்புடைய 'ஏ அமெரிக்கா' என்ற விமானநிறுவனத்தைச் சேர்ந்த

ஆடம்பர வாழ்க்கை வாழும் ஊழியர்கள் போதைவஸ்துக் கடத்தலில் பிரதான அங்கம் வகிப்பதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் போதைவஸ்துக் கடத்தல் தொடர்பாகப் பன்னிரெண்டு பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.

இவர்களில் எட்டுப் பேர் கொலம்பியாவைச் சேர்ந்தவர்கள். நான்குபேர் அமெரிக்கர்கள். 'ஏ அமெரிக்கா' நிறுவனம் மூலம் இவர்கள் அமெரிக்காவிற்கு ஏழரைக் கோடி டாலர்பெறுமதியான போதைவஸ்தைக் கடத்தி வந்துள்ளார்கள்.

[ஒ]

உலகச் செய்திகள்

## சட்டவிரோத மின்இணைப்பு

பண்டத்தரிப்பு, ஞாயிறு

யாழ். அபிவிருத்திச் சபையின் சங்கானை பட்டின உப அலுவலக பகுதியில் சட்டவிரோத மின் இணைப்புகள் அகற்றப்பட்டன. உப அலுவலக மின்சாரப் பகுதி ஊழியர்கள் இப்பகுதியிலுள்ள இருநூறுக்குமேற்பட்ட வீடுகளிலிருந்து சட்டவிரோத மின் இணைப்புகளை அகற்றியதுடன் பெருந் தொகையானவர்களையும் கைப்பற்றினுர்கள்.

(இ)

## அமரர் தர்மரின் 1 வது சிராத்த தினம்

யாழ்ப்பாணம், திங்கள்.

முன்னுள் மானிப்பாய் எம்.பி. அமரர் வி தர்மலிங்கத்தின் முதலாவது சிராத்த தினத்தை அடுத்த மாதம் 2ம் திகதி அனுஷ்டிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

அன்றைய தினம் தாவடியில் அமைந்துள்ள அமரர் வி.தர்மலிங்கத்தின் நினைவு ஸ்தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தியும் ஆலயங்களின் விசேட பூசையும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் மகேஸ்வர பூசையும் இராமநாதன் மகளிர் கல்லூரியில் அஞ்சலிக் கூட்டமும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

[வா]


## பிரயாண ஒழுங்குகள்

கனடா

சவுதிஅரேபியா

ஈராக்

[1] கனடா செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச்செல்வார் செல்ல விரும்புவோர் 17ந் திகதிக்குப் பிந்தாமல் தொடர்புகொள்ளவும்.

[2] சவுதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labour) வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19ந் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

[3] ஈராக் நாட்டில் (Hospital cleaners) ஆஸ்பத்திரி கிளினர்ஸ் ஆகச் செல்ல விரும்புவோருக்கு மிகவிரைவில் ஒழுங்குகள் செய்து தரப்படும். செல்ல விரும்புவோர் பாஸ்போட்டுடனும், 6படங்களுடனும் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், பொண்ட், ஆகியனவும் செய்து தரப்படும்.

தொடர்பு:

**N. BALA**

பஸ் வழி இல:
764, பலாலி வீதி
கோண்டாவில்.

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [C3988]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ கொலண்ட்
★ பெல்ஜியம்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.

**INTERSUN GROUP,**

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். (A-1029)

# ‘விஜே’ வீட்டிற்கருகிலும் கைக்குண்டு கண்டுபிடிப்பு

கொழும்பு, ஞாயிறு
சிறிலங்கா மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்காவின் கொழும்பிலுள்ள வீட்டிற்கருகில் இருக்கும் வடிகாலில் நேற்று முன்தினம் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

திரு குமாரணதுங்காவின் செயலாளரரல் கண்டுபிடிக்கப்பட்ட இக்குண்டுடன் இணைக்கப்பட்டிருந்த வயர்கள் சீர்குலைந்திருந்ததால் செயலிழந்திருந்தன எனத் தெரியவருகின்றது.

லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் கொல்வின் ஆர்.டி.சில்வாவின் வீட்டிற்கும் அண்மையில் வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று வீசப்பட்டது தெரிந்ததே.

திரு விஜயகுமாரணதுங்காவின் வீட்டிற்கருகில் கண்டெடுக்கப்பட்ட குண்டிற்கும், திரு கொல்வின் ஆர்.டி சில்வாவின் வீட்டிற்கு வீசப்பட்ட குண்டிற்கும் ஏதாவது தொடர்பிருக்கின்றதா என்பதுபற்றிப் பொலிசார் ஆராய்ந்துவருகின்றூர்கள். [ஓ]

## நல்லூர் உற்சவத்தில் சாரணர் சேவை

யாழ்ப்பாணம், திங்கள்
நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி கோயிலில் சாரணர் சேவை ஒழுங்குகளை சாரண உதவி ஆணையாளர் திரு ஏகாம்பரநாதன் மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்ட திரி சாரணர் குழுவினரும் [நல்லூர்] யாழ் மாவட்ட பாடசாலை சாரண குழுவினரும் இச் சேவையில் ஈடுபடவுள்ளனர். இச் சாரணர் சேவை 26வது வருடமாக நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

முதலுதவி, வீதி ஒழுங்குகள் மற்றும் பல சேவைகளிலும் இச் சாரணர் குழுக்கள் ஈடுபடுத்தப்படும். [ஓ-எ]

## ஒரு முன்மாதிரி ஆசிரியை



''சுகவீனம் என்று வீட்டில் படுத்திருக்கும்போது பிள்ளைகள் விளையாடியும் சண்டை பிடித்தும் வீண்காலம் போக்குவார் நான் போய் வகுப்பில் உட்கார்ந்திருந்தாலாவது அவர்கள் படித்துக் கொண்டு இருப்பார்களே என்று நினைப்பேன்.''

இப்படிக் கூறுகின்ற ஆசிரியர்கள் புதிய தலைமுறையில் எத்தனைபேர் இருக்கிறூர்கள்? ஆனல் முப்பத்துமூன்றுஆண்டுகளுக்கு மேலாகக் கல்விச் சேவையில் ஈடுபட்டு மாத்தளை, கொழும்பு ஆகிய இடங்களில் கல்விச் சேவையில் ஈடுபட்டும் 22 ஆண்டுகள்கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்திலும் பணியாற்றி இளைப்பாறும் ஆசிரியை பரமேஸ்வரி செல்லையா இப்படிக் கூறுகிறூர். அவர் லீவில் சென்ற நாட்களை விரல்விட்டு எண்ணலாம். ஆரம்ப வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை கற்பித்து நல்ல பெயர் எடுத்ததுடன் தன்பக்தி சிரத்தைகளால் மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் நிகழ்ந்தார் இந்த ஆசிரியை சிறுவர்பால்நேசமும் பெரிய மாணவர்களிடம் கண்டிப்பும் உள்ளவராய் வெற்றிகரமாகவும் தொழில் திருப்தியுடனும் ஆசிரியப்பணி செய்தார் வாழ்க்கையில் பெரும் சோதனைகள் வந்தபோதும் அவர் தம்சேவையில் அணுவளவேனும் தொய்வு ஏற்பட்டதில்லை அச்சேவையின் மகத்துவத்தை அவர் சமீபத்தில் ஓய்வுபெற்றபோது ஆசிரியர்களும் மாணவர்களும் வெகுசிரத்தையுடன் அவருககு ஏற்பாடு செய்த பிரியாவிடை உபசாரத்தின் போது காணக்கூடியதாயிருந்தது.

வாமா—சாரதா.

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 26 [1986-8-11)
கிழமை- திங்கள்
திதி- ஷஷ்டி மு. இ. வரை
நக்ஷத்திரம்- சித்திரை மு. இ. வரை

மேடம்- வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள். களஸ்திர சுகத்திற்கும் இடமுண்டு இன்று சுகாதாரம் வேண்டும்.

இடபம்- மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும். தொல்லைகள் அதிகரிக்கும். பிரயாணத்தைப் பின்போடவும்.

மிதுனம்- வியாபார விருத்திக்கு இடமுண்டு. வெளியிடத் தொடர்புகளில் முன்னேற்றம் காணப்படும். புதுமையான எண்ணங்களும் தலைதூக்கும்.

கடகம்- மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றமுண்டு வீட்டிலும் மகிழ்ச்சியான சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு வாகன சுகமும் உண்டு

சிங்கம்- முன்னேற்றம் தடைப்படும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். உடல்நலத்தைப் பேணவும்.

கன்னி- மனதில் அமைதி குன்றும். விஷமிகளின் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும். குடும்பத்திலும் சிறு பூசலுக்கு இடமுண்டு.

துலாம்- பணமுடை தீரும். பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்திலும் பரவசமான சூழ்நிலை காணப்படும்.

விருச்சிகம்- கருத்து வேற்றுகள் கலகத்துக்கு இடமளிக்கும். பொருள் தவறக்கூடும். எதிலும் அவதானம் வேண்டும்.

தனுசு- ஊதியம் வளரும் பந்தபாசம் உங்களைப் பரவசபடுத்தும். பொருள்வரவுடனே அன்னைவழி ஆதரவுமுண்டு.

மகரம்- இதயத்தில்இனிமை துள்ளும் பகைவர்கள் பணிவர். தொழிலாலும் சிறப்புண்டு.

கும்பம்- எப்பக்கம் திரும்பினலும் ஆதரவு கிடைக்கும் பிள்ளைகளாலும் மகிழ்ச்சியுண்டு. குருவின் ஆசியும் கிடைக்கும்.

மீனம்- பகைமூட்டம் தோன்றும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும். சுகாதாரம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகவிருந்து இளைப்பாறிய திரு. எம். கந்தையாவுக்கு அவரது சேவைகளைப்பாராட்டி நல்லூர் ப நோ. கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு பெ கனகசபாபதி நிலைமையில் இயக்குநர்களால் தேநீர் விருந்துபசாரம் அளித்துக் கௌரவிக்கப்பட்டது. (வா-இ)

மாகாணசபையினுல்

# வடக்கு கிழக்கில் தமிழர் ஆட்சி ஏற்படும்

கொழும்பு. சனி
''எமது சிறிய நாட்டில் இன்றைய ஆட்சியாளர்கள் மாகாண சபைகளை அமைக்க முயன்று வருகிறூர்கள். இதனுல் வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களின் ஆட்சிகள் ஏற்படும்''

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் திரு அநுரா பண்டாரநாயக்கா திஸ்ஸமஹறுமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கருத்தரங் கொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்: ''மாகாண சபைகள் அமைப்பதனை சிங்கள மக்கள் முற்ருக எதிர்த்தேயாக வேண்டும இல்லையேல் சிங்களவர்களின் எதிர்காலம் மிகவும் மோசமாகிவிடும்'' என்றூர். [இ]

# ‘நாட்டுமக்கள் அனைவருக்கும் சமஉரிமை வழங்கவேண்டும்’

## அமைச்சர் லலித்

கொழும்பு, ஞாயிறு.
''இந்த நாட்டில் வாழும் சகல இனத்தவர்களும் அரசால் பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறே அவர்களுக்குரிய உரிமைகள் கொடுக்கப்பட்டு சமமாக நடாத்தப்பட வேண்டும். இதனைத் தவிர நாட்டு மக்கள் எவரையும் அடக்கி ஒடுக்கும் நோக்கும் அரசுக்கு இல்லை.''

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி வாரியப்பொலவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினூர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

''உத்தேச மாகாணசபை திட்டத்துக்கு தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் இது வரை எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளாதது கவலைக்குரிய விஷயமாகும். வடக்கு கிழக்கில் நடைபெற்றுவரும் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு உத்தேச மகாணசபை திட்டத் தீர்வை தவிர வேறு எவ்வித அரசியல் தீர்வையும் முன்வைக்க முடியாது''என்றூர் (சி)

## இரத்ததானம் மகத்தானபணி

கொழும்புத்துறை, ஞாயிறு
‘குண்டுத்தாக்குதல் சூடுச் சம்பவங்களால் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் பொதுமக்களின் உயிர்களை மரணத்திலிருந்து பாதுகாக்கச் சகலரும் இரத்ததானம் வழங்க முன்வரவேண்டும்'' என்று கொழும்புத்துறை கிராம சேவை அலுவலர்பிரிவு மக்கள் அவை உணவுற்பத்திக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் இக் குழுவின் செயலாளரும் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜச் செயலாளருமான திரு சி சி. வரதராசா வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''தமிழ் மக்கள் இன்று பலவித இன்னல்களையும் அனுபவித்துவருகின்றனர் பல்வேறு துறைகளிலும் சுயமாகவே தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டியநிலையில் யாழ். பெரியாஸ்பத்திரியில் இரத்தத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் அவைகள், சமாதானசபைகள் சனசமூக நிலையங்கள், பொதுஸ்தாபனங்கள் முதலியன இரத்ததானம் வழங்க பொதுமக்களை ஊக்குவிக்கவேண்டியது இன்றைய சூழ்நிலையில் மகத்தான பணியாகும்.''

உணவுற்பத்துக்குழு தலைவர் திரு கே எஸ் இராசையா உரையாற்றுகையில்: வட்டார ரீதியில் வீட்டுத்தோட்டப் போட்டிகளை நடாத்தி உப உணவு உற்பத்தியை ஊக்குவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மக்கள் அவைப் பொதுச்செயலாளர் திரு ஆ மார்ட்டீன் நன்றியுரை கூறினூர். (சி)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு நடமாடும் ‘எக்ஸ்றே’ கருவி

யாழ்ப்பாணம், திங்கள்
சகல வசதிகளையும் உள்ளடக்கிய நவீன நடமாடும் ‘எக்ஸ்றே’ கருவி யாழ். ஆஸ்பத்திரிக்குகிடைக்கவிருக்கிறது

இப்புதிய கருவி மூலம் இனிமேல் குறிப்பிட்ட எக்ஸ்றே எடுக்கும் நோயாளிகள் உள்ள வார்ட்டுகளுக்குச் சென்று அங்கு வைத்தே நோயாளிகளைப் படம் பிடிக்க முடியும் (சி]

## கருத்தரங்கு

சாவகச்சேரி, ஞாயிறு
கைதடி ஆயுள்வேத நிர்மாணப்பணி தொடர்பான கருத்தரங்கு ஒன்று இம்மாதப் 16ம் திகதி சனிக்கிழமை காலை கைதடியில் இருக்கும் யாழ் பல்கலைக்கழக சித்த வைத்திய பீடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கினை சர்வதேச சமாதான சேவை இயக்கம் நடாத்துகின்றது. (இ]

## குழாய்க்கிணறு அமைக்க ஏற்பாடு

சாவகச்சேரி, ஞாயிறு
சாவகச்சேரி சந்தையில் இருக்கின்ற வியாபாரிகள் நலன் கருதி சந்தை வளவுக்குள் ஒரு குழாய்கிணற்றினை அமைக்க சாவகச்சேரி நகர சபை ஏற்பாடு செய்துள்ளது

இதன் மூலம் சாவகச்சேரி நவீனசந்தை வர்த்தகர்களின் தண்ணீர்த் தேவையையும் பூர்த்திசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது,


## 45-ம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
வைத்திலிங்கம்
பாலசுப்பிரமணியம்
அன்னை ன் மடியில்:
1963- 04- 27
ஆண்டவன் அடியில்:
1986- 06- 28

குடும்பத்தின் தலைமகனே, எங்கள் குலவிளக்கே. இதயத்தில் மாசத்தை எமக்கெல்லாம் தொடரவைத்து தஞ்சம் நீயென்று அனைவரும் நம்பியிருந்தோம். வயலில் நீ பாய்ச்சிக் கொண்டிருந்தபோது, நெற்பயிர் ஊடாக மறைந்துவந்த கொடியமனம் படைத்த அசுரராம் கூலிப்படையினர், எங்கள் செல்வம் கை எடுத்துக் கும்பிட்டும், மனமிரங்காது தீர்த்தவேட்டு உன் உயிரைப் பறித்ததே ஆறுத்துயர் அடைந்திருக்கும் நாம், அரனடி நீரடைய அவனடி இறைஞ்சி, 45-ம் நாள் நினைவுக் கண்ணீர் அஞ்சலியை அனைவரும் செலுத்துகிறேம்.

உன்பிரிவால் வாடும்:
தாயார், சகோதரர்கள், அத்தான், மருமகள், உறவினர், நண்பர்கள்.
(C 3950)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி யோகலட்சுமி
துரைசாமி
தோற்றம்; 17- 2- 1936
மறைவு: 12- 7- 1986

அன்புள்ள நாயகியே
ஆறுத்துயர் தந்து
என் புறக எனை வைத்து
எங்குநீ யேகினுய்
இன்முற ஈசன்
இணையடியை
எய்தினையோ
துன்பமிலா வாழ்வின்று
துயர்க்கடலில்
மூழ்கியதே.
உன்னுணை உன்போல
ஒருதாயை
நாமறியோம்
எண்ணமெலாம்
மண்ணுக்கி
ஏனே பறந்திட்டாய்
இன்முற எமைவளர்த்து
இனியகல்வி தந்தவரே
என்றும் எம் உளத்தில்
இனிதிருப்பீர்
எம் தாயே!

நாயகன், பிள்ளைகள்.
க வி துரைசாமி,
லக்ஷ்மி திலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை
(C 4001)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 11-8-86

# 'அவசியமேற்படின் சமரசத் தூதர்கள் மூலம் தீவிரவாதிகளுடன்பேச்சு' —ஜனாதிபதி

கொழும்பு ஞாயிறு

''இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றை காணும்வகையில் அவசியமேற்படும் பட்சத்தில் தமிழ்த்தீவிரவாதிகளுடனும் சமரசத்தூதுவர்கள் ஊடாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்', என்று ஜனாதிபதி ஜயவர்த்தன கூறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற பொது வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்னைக்கு தீர்வொன்று காணப்படுமுகமாக கூட்டணியினருடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்படுமென கூறிய ஜனாதிபதி தமிழர்களுடன் உடன்படிக்கையொன்று காணப்படும் பட்சத்தில் இந்திய அரசும் இலங்கைக்குஉதவுவதாக உறுதியளித்துள்ளதென்றும் தமிழ்நாடும் உதவுமென்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில் சமாதான உடன்படிக்கையை அமுல்படுத்தல் தேர்தல்களை நடத்துதல், தீவிரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் ஆகியவை தொடர்பாக இந்திய அரசு இலங்கையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளவேண்டுமெனவும் இதன் காரணமாகவே மத்திய தமிழ்நாடு அரசுகளின் ஒத்துழைப்புடன்இப் பிரச்னையை தீர்க்கத்தான் தீர்மானித்ததாகவும் கூறினர்.

வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிக் குறிப்பிடுகையில, இதனை இந்திய மத்திய அரசு கூட எதிர்க்கிறது என ஜனாதிபதி கூறினர்.

## ரொனி கருத்து

இவ்வைபவத்தில் நிதியமைச்சர் திரு.ரொனி டி மெல் உரையாற்றுகையில், இலங்கைஅரசினல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய இனப்பிரச்னையைத் தீர்க்காது இராணுவத்தைப் பயன்படுத்தினல் நாட்டின் ஒற்றையாட்சி அமைப்புமுறைக்கு ஆபத்தேற்படும் என விளக்கினர். சைப்பிரஸ் பற்றிக் கூறிய நிதியமைச்சர், அங்கு தகுந்த சமயத்தில் அதிகாரப் பரவலாக்கல் செய்யாததினுலேயே பிரச்னைகளஎழுந்துள்ளன என்ருர்.

---

## குழப்பமின்றி பரீட்சைகள்

வவனியா, ஞாயிறு.

வவனியவில் நேற்று நடத்தப்பட்ட ஐந்தாம் வகுப்புக்கான புலமை பரீட்சைகள் யாவும் அமைதியாக முடிவடைந்தன

பதினன்கு நிலையங்களில் நடைபெற்ற இப்பரீட்சையில் சுமார் 1400 மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

[ரா]

---

## சீ-நோர் நிறுவனத்தில் பொருட்கள் கொள்ளை!

பண்டத்தரிப்பு, ஞாயிறு

காரைநகர் சீ-நோர் நிறுவனத்தில் இரவுவேளையில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் ஆயுதபாணிகளாக வந்த இனம் தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்றினல் நேற்று முன்தினமிரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குளிர்சாதன இயந்திரங்கள், மின் மோட்டார்கள், மின் விசிறிகள், சக்தி வாய்ந்த மின் ஒளிச்சாதனங்கள் ஆகியாவையே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இரவுவேளையில் சுமார் 15 பேரைக் கொண்ட இளைஞர் கோஷ்டி ஒன்று இந்நிறுவனத்திற்குள் பிரவேசித்து அங்கிருந்த காவலாளியையும் மற்றும் இருவரையும் ப்பாக்கிமுனையில் பயமுறுத்தி அறையொன்றினுள் விட்டுப் பூட்டிவிட்டு இக்கொள்ளையை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கொள்ளைச் சம்பவம் பற்றி சீ-நோர் நிறுவன பிரதிப் பொதுமுகாமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

---

## நெல்லியடியில் இளைஞர் ரோந்து

நெல்லியடி, ஞாயிறு

நெல்லியடிப் பட்டினசபைப் பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் இரவு நேரங் ளில் ரோந்துசெல்வதற்கு முன்வந்த நூற்றுக்கும் அதிகமான இளந்தொண்டர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தற்போது களவுகள போன்ற அசம்பாவிதங்கள் பெருமளவுக்குக்குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

[இ]

---

## சமூக சேவை

இருப்பிட்டி, ஞாயிறு

புங்குடுதீவு தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கத்தினர் புங்குடுதீவு மக்களின் சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ளனர். புங்குடுதீவு பகுதியில் உள்ள பொதுக்கிணறுகள் குளங்கள் ஆகியவற்றை துப்பரவு செய்வதிலும், பாவனைக்கு உகந்த வகையில் பயன்படுத்தல் போன்ற சமூக சேவைகளிலும் ஈடுபட்டனர் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கும், இந்திய மீனவர்களுக்கும் தலா 5000 ரூபாவும் உடுப்பு, உணவு வகைகள் போன்றவையும் வழங்கப்பட்டது.

இச் சங்கம் வேலணை தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கத்துடன் முன்னர் இணைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

## இன்று சந்திப்பு

கொழும்பு, ஞாயிறு

யாழ். பல்கலைக் கழகத்துக்கு வெளியிடங்களிலிருந்து முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பது குறித்து ஆராயவென உயர்மட்டத் தூதுக் குழுவொன்று பல்கலைக் கழக மானியக்குழுவின் தலைவர் டாக்டர் கல்பகேயை இன்று சந்திக்கவுள்ளது.

(கூ - ஊ)

---

## மூன்ருவது தடவையாகவும் முதலிடம்

வவனியா, ஞாயிறு

1985-ம் ஆண்டுக்குரிய காப்புறுதி முகவர்கள், அமைப்பாளர்களுக்கிடையிலான போட்டியில், அநுராதபுரம் பிரதேச மட்டத்தில ஆயுள், பொது காப்புறுதி திட்டங்கள் சம்பந்தமான இரு போட்டிகளிலும் வவனியா முகவர் திரு எம். எஸ். குணரட்ணம் முதலாவதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகாலமாக தொடர்ந்தும் தெரிவு செய்யப்பட்டஇவர் மூன்ருவது ஆண்டும் தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கான பரிசுப் பணம் கொழும்பில் நடைபெறவிருக்கும் வைபவத்தில் வழங்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## மாட்டு வண்டியில் வந்த இருவர் சுட்டுக் கொலை!

வவனியா, ஞாயிறு

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரால் மாட்டு வண்டியில் வந்த இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்று உயிலம் குளத்தில் இடம் பெற்றது. இதுபற்றி தெரிவிக்கப்படுவதாவது:-தள்ளாடி முகாமைச்சேர்ந்த இராணுவத்தினர் மன்னுர் பிரதான வீதியூடாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்பொழுது அப்பாதையினூடாக மாட்டு வண்டியில் சென்றுகொண்டிருந்த இருவரும் இராணுவத்தினரைக் கண்டு பயந்து ஓடும்பொழுது சுட்டுக்கொல்லப்பட்டனர்.

[ரா]

---

## நாவலப்பிட்டியில் — கண்ணிவெடி; 4 தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு, ஞாயிறு

நாவலப்பிட்டியிலுள்ள தோட்டமொன்றுலிருந்து ஒரு தரைக்கண்ணி வெடியும் கைக்குண்டொன்றும், 2 ஷொட் கண்களும் பொலிஸாரினல் கைப்பற்றப் பட்டிருப்பதாக கொழும்புபத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நாலு தமிழ் இளைஞர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் இச்செய்தி கூறுகிறது.

(கூ - ஊ)

---

## மரண அறிவித்தல்

### கந்தையா சோமசுந்தரம்

கோண்டாவில் கிழக்கை சேர்ந்த பிரபல புகையிலை வர்த்தகர் கந்தையாசோமசுந்தரம்காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்பு கணவரும் மகேஸ்வரி, இராஜரத்தினம் (ரேடியோ மலேசியா), பூபாலசிங்கம், வேலாயுதபிள்ளை (அரசினர் தோட்டம் அட்டம்பிட்டிய), அன்னலட்சுமி, ஸ்ரீஸ்கந்தராசா, பாலசுப்பிரமணியம், செல்வராணி ஆகியோரின் அன்புத்தந்தையும், இராஜரத்தினம், விக்னேஷ்வரி (ஆசிரியை கோலாலம்பூர்), சிவநாதன் (குமரன் ஸ்ரோஸ் அட்டன்), நகுலேஷ்வரி, தேவமனோ, கமலநாதன், கலாமதி ஆகியோரின் அன்புமாமனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை (11-8-86) காலை 10 மணிக்கு கோண்டாவில் மயானத்தில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

[C 3996]

### கந்தையா முருகேசு

கீரிமலை நித்தியானந்தபவான் உரிமையாளர் க. முருகேசு அவர்கள் காலமாகிவிட்டார். இவர் இராசம்மாவின் [கேணிப் பாதுகாவலர்] அன்புக்கணவரும், ஜெகதீஸ்வரன் [லிபியா], ஜெகதீஸ்வரி, புஸ்பராணி (ராணி) (பிரான்ஸ்), பாரதிதாசன் ஆகியோரின் அன்புத்தந்தையும், துரைராசா (தலைமை காட் மட்டக்களப்பு), சர்வேஸ்வரி, மகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், மயில்வாகனம், சின்னத்தங்கம் செல்லத்துரை, செல்லமுத்து ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற வயிரமுத்து [ஸ்ரீமுருகன் கபே மாவிட்டபுரம்], சின்னத்துரையின் (கீரிமலை கேணிப்பாதுகாவலர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவர். அன்னரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை (11-8-86) பிற்பகல் 4 மணிக்கு கீரிமலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்ருர் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்.

[C4002]

### செல்லையா இராமமூர்த்தி (மூர்த்தி)

ஏழாலை வடக்கு செல்லையா சீதாலட்சுமி தம்பதிகளின் ஏகபுதல்வனும், யோகமலரின் அன்புக்கணவரும், சசிகுமார், சுஜீதா, இரமேஸ்குமார் ஆகிய இளவல்களின் ஆருயிர்த்தந்தையும், சாந்தமான சமூகத்தொண்டரும், யாழ் பெரியகடை வாழைப்பழ வியாபாரியுமாகிய இராமமூர்த்தி 10-08-86 இல் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலினுல் இயற்கை எய்திவிட்டார். அன்னரின் அந்திமக்கிரியைகள் 11-08-86 இன்று நண்பகல் ஏழாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை யாவரும் அறியத், தெரியத் தருகிறேம்.

(C 4005)

### வ. சின்னத்தம்பி

இடைக்காட்டைச் சேர்ந்தவரும், அத்தியடி வாசியுமாகிய வல்லிபுரம் சின்னத்தம்பி காலமானுர். இவர் காலம்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், மங்கையர்க்கரசியின் அருமைத் தந்தையும், N. கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)வின் மாமனுரும் உத்தரகோசமங்கை, கிருஷ்ணபவன் [France], ஸ்ரீபவன் [France], லிங்கபவன் [U. K], இராசரத்தினம் [MLT யாழ் அரசினர் வைத்தியசாலை], சிவமலர், பிரியதர்சினி, சித்திரா ஆகியோரின் பேரனுரும், ஜனர்த்தனன், சுகிதனன், அனுரதன், [யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள்] ஜெயசிவாஜா [சென்யோன் பொஸ்கோ] விடேஷ், வித்யாதுசாகி ஆகியோரின் பூட்டனுருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று 11-8-86 திங்கட்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 104/2, பிள்ளையார் கோவில் குறுக்கு வீதி, அத்தியடி யாழ்ப்பாணம்.

தகவல்: நா. கந்தையா

C 4004

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126.